# 35-வது சென்னை புத்தகக் கண்காட்சியில் சிறந்த நூலகர் விருது பெறுகிறார்

# பாலம் கலியாணசுந்தரம் ஐயா

# அன்பு பாலம்

எண்.1, 4-வது பிரதான சாலை, கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை - 20. தொலைபேசி, தொலைநகல்: 24402524 கைபேசி: 9840218847

1. பாலம் கலியாணசுந்தரம் ஐயா தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருள்மிகு குமரகுருபரர் கலைக் கல்லூரியில் 35 ஆண்டுகள் நூலகராகப் பணிபுரிந்தார்.
2. 1995-ல் இந்தியாவின் சிறந்த நூலகர் என்ற தேசிய விருது கோவா பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்டது.
3. 1996-ல் உலகின் 10 சிறந்த நூலகர்களுள் ஒருவர் என்ற சர்வதேச விருது டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் வழங்கப்பட்டது.
4. உச்சநீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய சபை உலகின் சிறந்த பண்பாளர்களில் ஒருவர் என்ற கௌரவத்தையும் அப்போது அளித்தனர்.
5. புதுமையான நூலக நூற்பட்டியை இவர் கல்லூரியிலேயே ஆறுமாத காலம் தங்கியிருந்து தயாரித்தார். அந்த ஆராய்ச்சி முடியும்வரை அவர் வீட்டிற்கே செல்லவில்லை.
6. இம்முறையில் நூற்பட்டி தயாரித்தால் ஒரு நூலின் தலைப்பையும், ஆசிரியர் பெயரையும் சொன்னால் உடனடியாக அந்த நூலின் புத்தக எண்ணைச் சொல்லிவிடலாம்.
7. மதுரை காமராசர் பல்கலைக் கழகம் இவரது ஆராய்ச்சியைப் பாராட்டி அதனை ஏல் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது.
8. ஏல் பல்கலைக்கழகம் தகுதிச்சான்று (Merit Certificate) வழங்கியதுடன் நூலை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குப் பரிந்துரைத்தது.
9. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் 'A Most Notable intelectual' என்ற பட்டத்தை வழங்கியதுடன் நூலகத்துறைக்கு நோபிள் பரிசு இருந்தால், அதனைப் பெறத் தகுதி இதற்கு உண்டு என்ற குறிப்பையும் வழங்கியது.
10. நூலகத்தந்தை S.R. ரங்கநாதனுக்குப் பின் மாநில, தேசிய, சர்வதேச அரங்கில் நூலகத்துறையில்/இந்தியாவில் கௌரவம் பெற்றவர் நம் பாலம் ஐயா.
11. தனது குடும்பத்திற்கும், நாட்டிற்கும் மட்டுமின்றி மாத ஊதிய வர்க்கத்தினர் அனைவருக்கும் கௌரவத்தைத் தேடித் தந்தவர் பாலம் கலியாண சுந்தனார்.

இயக்குநர் K. சுபாஷ் உருவாக்கியுள்ள
"பாலம் ஐயாவைப் பற்றிய ஆவணப்படம்" உலகத்
திரைப்பட விழாவில் திரையிடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
இது உலகளாவிய அங்கீகாரமாகும்.

**அன்பு பாலம் மாத இதழ் (அன்பு பாலம் அரங்கு எண் 312)**

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 200/- | புரவலர் | ரூ. 5,000/- |
| நிரந்தரச் சந்தா | ரூ. 2,000/- | காப்பாளர் | ரூ. 10,000/- |

# பாலம் கலியாணசுந்தரம் ஐயா: சில குறிப்புகள்

ஒவ்வொருவருக்கும் பணம் மூன்று வழிகளில் மட்டுமே கிடைக்கும்.

- சுய உழைப்பு
- மூதாதையர்கள் தேடி வைத்தது
- பிறர் கொடுப்பது

இந்த மூன்று வழிகளிலும் வந்த பணத்தை ஐயா அவர்கள் எப்படி பயன்படுத்தினார்கள் என்பதை தெரிந்து கொள்வோம்.

1. ஒரு கல்லூரியில் பேராசிரியர் பதவியில் 35 ஆண்டுகள் பணிபுரிந்தார். மாதம் ரூ. 20,000 (இருபதாயிரம்) சம்பளமாக பெற்றபோதிலும் அனைத்தையும் ஏழை மக்களின் நலனுக்காக செலவிட்டு, நமது சொந்தச் செலவிற்கு ஒரு உணவகத்தில் சர்வராக வேலை பார்த்தார். இவ்வாறு 35 ஆண்டுகளாக தான் பெற்ற ஊதியம் ரூ. 30,00,000/- (முப்பது லட்சம்)த்தையும் முழுமையாகக் கொடுத்து வரலாறு படைத்தார்.
2. உலகில் எந்த நாட்டைச் சேர்ந்த மத்திய, மாநில அரசு ஊழியர்களோ, தனியார் நிறுவனத்தில் வேலை செய்பவர்களோ இவ்வாறு செய்ததில்லை எனபதால் அமெரிக்காவில் "ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர்" (Man of Millinium) என்ற விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, 6.5. மில்லியன் டாலர் (30 கோடி) பரிசாகப் பெற்றார். அதையும் குழந்தைகள் நலனுக்காக அளித்து உலகில் கோடிக்கணக்கானவர்களை வியப்பில் ஆழ்த்தினார்.
3. தன் பங்கிற்குக் குடும்பத்தில் கிடைத்த ரூ. 50 லட்சம் மதிப்புடைய சொத்தில் தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாமல் மக்களுக்கு அளித்து தனக்குப்போக தானம் என்பதை மாற்றிக் காட்டினார்.
4. ஐயா அவர்கள் தன் பேருக்குப் பின்னால் M.A. (Litt), M.S. (His), M.A. (GT), B. Lip.Sc., DGT, DRT, DMTI, FNCW, DS am 36 எழுத்துக்குச் சொந்தக்காரரான இவர் அனைத்திலும் பல்கலைக்கழகத்தில் முதலிடம் பெற்றார்.
5. ஏழைகளின் துயரினை நேரிடையாக அறிந்துகொள்ள 7 ஆண்டுகள் நடைபாதைவாசியாகவே வாழ்ந்தார்.
6. 25 ஆண்டுகளுக்கு முன்பாகவே தன் உடல் உறுப்புகளை மருத்துவக் கல்லூரிக்குத் தானமாக எழுதி வைத்துவிட்டார்.
7. வாழ்நாள் முழுவதும் 1 செண்டு நிலம், ஒரு ஓலை குடிசை ஒரு சல்லிக் காசு இல்லாமல் அனைத்தையும் நாட்டு மக்களுக்காக அர்ப்பணிக்க திருமண வாழ்வையும் தியாகம் செய்தவர்.
8. ஐந்தாவது ஊதியக் குழுவில் விடுபட்ட ஊதியத்தை 14 ஆண்டுகள் முன் தேதியுடன் அரசு வழங்கிய ரூபாய் 10 லட்சத்தையும் தனது 70வது பிறந்த தினத்தில் மக்களுக்கு அளித்தார்.
9. 6வது ஊதியக் குழுவில் பயன்பெறும் ரூ. 5 லட்சத்தை ஏழை குழந்தைகளின் கல்விக்காக இப்போதே எழுதி வைத்துவிட்டார்.
10. கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுத்த இவர் ஏழைகளுக்குக் கிட்டாத உணவையோ, உடையையோ, இருப்பிடத்தையோ பயன்படுத்தாமல் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஐயாவின் கொள்கைகள்:**

- எதன் மீதும் பேராசை கொள்ளாதிருப்போம்.
- பத்தில் ஒன்றை தானம் செய்வோம்.
- தினமும் ஓர் உயிருக்கு நன்மை செய்வோம்.